# அறவழி காட்டும் அற இலக்கியங்கள்

**செ. ஜடா**
தமிழ்த்துறை, திருச்சிலுவை கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629004.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627012.
மின்னஞ்சல்: **idastanly3@gmail.com.**

**முன்னுரை:**

அறத்தின் மேன்மை அகிலத்தைக் காக்கும் உயிர்மை. கொடியன அகலவும் நன்மைகள் பெருகவும் அறச்செயல்கள் மேலோங்க வேண்டும். மனிதனின் மிருகத்தன்மை அகல அன்பு வழி முக்கியம். அந்த அன்பு வழியை அடைய அறவழித் தடம் மிக அவசியம். உலகின் தற்போதைய போக்கு மிகவும் கெடுமைத்தன்மை வாய்ந்ததாக உள்ளது. எவ்வுயிரையும் துச்சமென நினைக்கும் பழக்கம் அதிகரித்து விட்டது. எவருக்கும் நன்மைகள் செய்ய யோசிப்பதில்லை. இதிலிருந்து மாற அறவழி மிக முக்கியம். ஊர்போற்றவும் உலகம் காக்கவும் எழுந்ததே அற இலக்கியங்கள். இந்த அற இலக்கியங்கள் காட்டும் அறவழியை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**அற இலக்கியங்கள்:**

களப்பிரர்கள் காலம் தமிழகத்தின் இருண்ட காலமாக கருதப்படுகின்றது. இக்காலத்தில் பண்பாடற்றச் செயல்களும் பல கொடுமைகளும் தலை விரித்து ஆடியது. அதனால் அன்பு வழியைக் காட்டவும் அறவழியைப் போதிக்கவும் எழுந்ததே அற இலக்கியங்கள். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திருகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, ஆகிய பதினொரு நூல்கள் அற இலக்கியங்களாகக் கொள்ளப்படுகிறது.

தமிழ் சமூகத்தில் நீண்ட காலமாகப் பல்வேறு குலங்களுக்குள்ளும் அரசர்களுக்குள்ளும் நடந்த இடைவிடாத போர்கள் அக்கால மக்களுக்கு ஒருவித மனச்சோர்வையம் விரக்தியையும் அளித்தன. கொலை, கொள்ளை, கள் குடித்தல் , பரத்தையர் ஒழுக்கம் போன்ற தீயச்செயல்கள் மிகுந்திருந்தன. இக்காலத்தில் சமய பிரச்சாரம் செய்யவந்த சமண, பௌத்த சமயங்கள் இப்போக்கைக் கண்டித்தன. சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் அரசன் முதல் குடிமக்கள் வரை அனைவருக்கும் புதிய கருத்துக்களையும் நீதியையும் போதித்தன. அறநூல்களின் கருத்துக்கள் பெருங்குழப்பத்தில் ஆழ்ந்திருந்த தமிழ்ச் சமூகத்திற்கு ஒருவித தெளிவைக் கொடுப்பது போல் அமைந்திருந்தன.

**அறச்செயல்கள்:**

வாழ்க்கை வாழ பல நெறிமுறைகள் உள்ளன. இந்த நெறிமுறைகளைக் கையாண்டு வாழும்போது தேவையற்ற பிரச்சனைகள் களையப்படுகின்றன. பல உயிர்கள் காக்கப்படுகின்றன. பெரும் சேதங்கள் நிகழாமல் அகல்கிறது நாம் வாழும் பூமியில் அமைதியை நிலைநாட்டுவது நம் ஒவ்வொருவரின் கடமை ஆகும். தேவையற்றச் செயல்களைத் தவிர்த்து உயிர்கள் இன்புற்று வாழ எது வேண்டுமோ அதை மட்டுமே மேற்கொண்டால் இவ்வுலக வாழ்வு சீராகவும் சிறப்பாகவும் அமையும். அறச்செயல்களின் தேவை எதற்கு என்று ஆராய்ந்தால் இவ்வுலக

வாழ்வை விடுத்து மறு உலக வாழ்வை அடைய ஒவ்வொருவரும் அறத்தைக் கையாள வேண்டும். அதுமட்டுமல்லாது நாம் செய்யும் நல்ல செயல்கள் நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் பிற உயிர்களை வாழ வைப்பதாக அமையும். 'அறம் செய விரும்பு' என்றார் ஔவை. தன்னுடன் வரத் துணை வேண்டுமென்றால் அறம் செய்ய வேண்டும் என்று கூறுகிறார் விளம்பிநாகனார். இதனை,

''இன்னாமை வேண்டின் இரவெழுக, இந்நிலத்து
முன்னுதல் வேண்டின் இசைநடுக, தன்னொடு
செல்வது வேண்டின் அறம் செய்க, வெல்வது
வேண்டின் வெகுளி விடல்''

என்னும் நான்மணிக்கடிகை பாடல் வழி அறிய முடிகிறது.

**"**மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே'' (புறம்-165)

என இவ்வுலகில் நிலையானப் புகழை நிறுவவேண்டுமானால் நல்லச் செயல்களைச் செய்து விட்டுத்தான் மறைதல் வேண்டும் என புறநானூறு புலப்படுத்துகிறது. மணிமேகலையும்,

''அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாமை
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்'' (மணிமேகலை ஆபுத்திரனோடு அணிபல்லவமடைந்த காதை 228-230)

என அறத்திற்கு விளக்கம் தருகிறது.

''ஈதற்கு செய்க பொருள'' (நாலடி 90)என நாலடியாரும்,

நிறைநெஞ்சு உடையானை நல்குரவு அஞுசும் (திரி 72) எனத் திரிகடுகமும்,

கண்ணுக்கு அழகு கண்ணோட்டம் (சி.மூ 7) எனச் சிறுபஞ்சமூலமும் அறத்தின் தேவையை எடுத்தியம்புகின்றன.

**நிலையாமை:**

இந்த உலகத்தில் மாற்றங்களே மாறாதவைகளாக உள்ளன. எதையுமே நிலையானதாகக் கொள்ளமுடியாது. இப்படியான உலகில் மனிதன் உலகியல் சார்ந்து ஓடிக் கொண்டிருக்கிறான். வள்ளுவர் இதனை,

**"**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வான்மை கடை'' (குறள்-331)

எனத் தன் குறள் வழி உலகுக்கு உணர்த்த முற்பட்டுள்ளார். மானிட வாழ்வு சடுதியில் மறைந்து போகும் மாய வாழ்வாகவே உள்ளது. எத்தனை உறவுகள் இருந்தாலும் எவ்வளவு செல்வங்கள் சேர்த்து வைத்திருந்தாலும் உலகெலாம் புகழ் ஓங்கி இருந்தாலும் ஒருநாள் அனைத்தையும் விட்டுவிட்டு இவ்வுலகிலிருந்து மறைந்து விடுதே மனிதத்திற்கு வகுக்கப்பட்ட நியதி. இது அனைத்து உயிர்களுக்கும் பொருந்தும். உலக நிலையாமையை உணர்ந்தவர்கள் தங்களின் முதுமையில் துன்பங்கள் வந்து சேரும் என்பதற்காக இளமையிலேயே கவனமாக அறச்செயல்களைச் செய்து வாழ்ந்திருப்பர். இளமையில் தான் விரும்பியபடி அறத்திற்குப் புறம்பாக நடப்பவர்கள் முதுமையில் துயரப்படுவார்கள். இவ்வுண்மையை நாலடியார்,

நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர்
குழவி யிடத்தே துறந்தார் புரைதீரா
முன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார் (நாலடியார்11)

என அறிவுறுத்துகிறது.எவ்வளவு வெல்வம் சேர்த்தாலும் அது ஒருநாள் விட்டுச் சென்று விடும். எனவே தன்னிலையில் மாறாது மனிதன் வாழவேண்டும் என்பதை,

''முற்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று.'' (முதுமொழிக்காஞ்சி சிறந்த பத்து)

என முதுமொழிக் காஞ்சி எடுத்துரைக்கிறது.

"காலும் இரண்டும் முகட்டலக் கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்தி ரண்டுள
மேலுள் கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே" (திருமந்திரம் யாக்கை நிலையாமை 5)

**நன்றி உணர்வு:**

நன்றி உணர்வு நானிலத்தைக் காக்கும் உயர் கவசம். மானிடத்தின் உணர்வில் நன்றியறிதல் காணாமல் போய்க்கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது. தக்கநேரத்தில் செய்யும் உதவியானது தலைமுறையைக் காக்கும் இயல்படையது. உற்ற நேரத்தில் செய்யப்படும் உதவி உலகைக்காக்கம் சிறப்படையது. இதனையே குறள்

"காலத்தினாற் செய்த உதவி சிறிதென்னனும்
ஞானத்தின் மாணப் பெரிது"

என்று குறள் குறிப்பிடுகிறது. நன்றி உணர்வில்லாதவர்களைக் கீழோர் என நாலடியார் குறிப்பிடுகிறது. இதனை,

''தினையனத்தே யாயினும் செய்நன்றுண்டால்
பனையனத்தா உள்ளுவர் சான்றோர் - பனையனத்து
என்றும் செயினும் இலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியாார் மாட்டு" (நாலடி 344)

என்ற வரிகளில் மெய்ப்பிக்கிறது.

நன்றிப் பயன் தூக்கா நாணிலி எச்சம் இழந்து வாழ்வார் (திரி 62)

என திரிகடுகமும்,

நன்றிப் பயன் தூக்கி வாழ்தல் நனியினிது (இனி நாற் 30)

என இனியவை நாற்பதும் நன்றியறிதலின் பெருமையை வரையறுக்கின்றன. புறநானூற்று வரிகளில்,

"நிலம்புடை பெறர்வதாயினும் மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே" (புறம் 34:4-5)

என்று கூறப்பட்டிருப்பது நன்றியறிதலின் உயர்வை யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது.

**முடிவுரை:**

முன்னோர் வகுத்த அறநெறிகளை கடைபிடித்து வாழ்வது மானிடத்தின் தலையாய் கடமைகளில் ஒன்று. நல்ல செயல்களைச் செய்ய ஆராயவேண்டிய தேவை இல்லை. பிற உயிர்களிடம் அன்பு காட்டுவதுடன் அடைக்கலம் கொடுக்கவும் மானிடத்தின் இயல்பாக அமைதல் வேண்டும். தாவி ஓடும் நதிபோல் வாழ்வும் ஓர்நாள் தாவி மறைந்துவிடும். கொஞ்சநாள் உலகில் கொஞ்சமேனும் அறத்தை கடைபிடித்தால் கொஞ்சமேனும் உய்வடைய வழிபிறக்கும். அறநூல்களை அறிந்து அவற்றின் கருத்துகளைப் போற்றி கடைபிடித்து வாழ்வில் இனிமையடையும் நிலையை எய்துவோம்.

**பார்வை நூல்கள்:**

1. அறவாணன் க.ப 2008 அறஇலக்கியக் களஞ்சியம், தமிழ்க்கோட்டம, 2 முனிரத்தினம் தெரு, அமைந்தக்கரை, சென்னை - 600029.
2. இராமநாதபிள்ளை (வி.உ) 1942 திருமந்திரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் , திருநெல்வேலி.
3. மணிவாசகன் ஞ (உ.ஆ) 1998 புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை - 600001.
4. வேங்கடசாமிநாட்டார் ந.மு(உ.ஆ) 2007 மணிமேகலை, சாரதா பதிப்பகம் சாந்தி அடுக்கம் கிருஷ்ணாபுரம் தெரு, சென்னை - 14.